**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No. 343/2015</u>**

**<u>நாள்.18.03.2026</u>**

**<u>பி.வா.சா. 2</u> - சௌந்திரராஜ்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எந்த ஊர் என்றால் ஆவராந்தை. எனக்கு அச்சம்பட்டி கிராமத்தில் இடம் உள்ளதா என்றால் இடம் உள்ளது. நான் அச்சம்பட்டி கிராமத்தில் விவசாயம் செய்கிறேனா என்றால் ஆமாம் காட்டு மகசூல் வைப்போம். வாதி செல்வராஜ் மற்றும் பிரதிவாதிகள் அன்னத்தாய் வகையறாவை தெரியுமா என்றால் தெரியும். வாதி செல்வராஜ் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து ஆதியில் வாதி செல்வராஜ் தாத்தா வீரபுத்திரத்தேவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். வீரபுத்திரத்தேவர் இறந்தபிறகு, வாதியின் தந்தை மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையும் பொதுவாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வாதியின் தந்தை மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையும் பொதுவாக அனுபவித்து வந்து, அவர்களுக்குள் நடைபெற்ற வாய்மொழி பாகப்பிரிவினையின் படி, 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தை கட்டாரித்தேவருக்கு தாவா சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான் தற்போது கட்டாரித்தேவர் இறந்துவிட்டார். வாதியின் தந்தைக்கு என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. வாதியின் தந்தை மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையும் பொதுவாக அனுபவித்து வந்தார்கள் அவர்களுக்குள் சொத்துக்கள் வாய்மொழி பாகப்பிரிவினையின் படி பிரிக்கப்படவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**7 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் நன்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் தெரியும். என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொன்ன தகவலின் பேரில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் மகாராஜன் சொன்னார் நானும் சொன்னேன். என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் கடைசி 2 வரிகள் மற்றும் 2 வது பக்கத்தில் முதல் 2 வரிகளில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் கண் கண்ணாடி அணிந்து வராததால் என்னால் படிக்க முடியவில்லை. என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் கடைசி 2 வரிகள் மற்றும் 2 வது பக்கத்தில் முதல் 2 வரிகளில், "இந்த நிலையில் 4, 5 பிரதிவாதிகள் 7ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்துக்களை வாய்மொழி அடமானம் கொடுத்து அந்த அடமானத்தின் அடிப்படையில் 7ம் பிரதிவாதிதான் தபசில் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்" என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட 7 வது பிரதிவாதி கனியம்மாள் என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியும். மேற்கண்ட வாசகங்களை நான் நன்கு தெரிந்து தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 7 வது பிரதிவாதி கனியம்மாள் எவ்வளவு ஆண்டுகளாக சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் எத்தனை வருடம் தெரியாது ஆனால் அனுபவித்து வருகிறார். 7 வது பிரதிவாதி கனியம்மாள் எந்த காலகட்டத்தில் இருந்து அனுபவித்து வருகிறார் என்றால் தெரியாது. சாட்சி சொல்ல வருவதற்கு முன்பாக தாவா நிலத்தை பார்த்துள்ளேனா என்றால் அந்த வழியாகத்தான் போய் வருவேன் ஆனால் தாவா நிலத்தை பார்த்தது இல்லை. தாவா நிலத்தில் என்ன மகசூல் வைத்துள்ளார்கள் என்றால் தெரியாது. தாவா நிலம் என்ன வகையான நிலமாக உள்ளது என்றால் மானாவாரி நிலமாக உள்ளது. மானாவாரி நிலத்தில் கரும்பு போட முடியுமா என்றால் கரும்பு போடமுடியாது.

தாவா நிலத்தில் சொட்டுநீர் போட்டு கரும்பு போட்டுள்ளார்கள் என்றால் தாவா நிலத்தில் சொட்டுநீர் போட்டு, கரும்பு போட்டுள்ள விபரம் எதுவும் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு யாரால் யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கட்டாரித்தேவர் மகன் மகாராஜன் கனியம்மாள் மீது வழக்குப் போட்டுள்ளார். கட்டாரித்தேவரை நான் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். கட்டாரித்தேவருக்கு உடன்பிறந்தவர்கள் யார் என்றால் பாலுத்தேவர். பாலுத்தேவர் மக்கள் யார் என்றால் 3 ஆண், 2 பெண், வேலு, மாரியப்பன், செல்வராஜ், ராமாத்தாள், வள்ளித்தாய். வேலு, மாரியப்பன் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். வேலு, மாரியப்பன் ஆகியோர்களுக்கு வாரிசுகள் உண்டா என்றால் ஆமாம் இருக்கிறார்கள். வேலு, மாரியப்பன் ஆகியோர்களின் வாரிசுகள் பெயர் என்ன என்றால் மாரியப்பனுக்கு ஒரு மகன் மற்றும் 2 பெண் மகள் இருக்கிறார்கள், வேலுவுக்கு 3 பெண் மக்கள் இருக்கிறார்கள். வாதி செல்வராஜ் எந்த ஊர் என்றால் ஆவராந்தையில் முன்னால் இருந்தார் தொழில் காரணமாக கோவில்பட்டி சென்று 30 வருடங்களுக்கு மேல் ஆகிறது. வாதி செல்வராஜ் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் அவரது பங்கை கேட்டதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி செல்வராஜ் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் அவரது பங்கை கேட்டதாக சொல்லிய விஷயங்கள் எனக்கு தெரியாமல் சேர்க்கப்பட்ட விஷயங்கள் அதில் எனக்கு உடன்பாடில்லை என்றால் சரிதான். நானும் மகாராஜன் என்பவரும் 7 வது பிரதிவாதியினுடைய சொத்தில் உள்ள உரிமையை மோசம் செய்வதற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**7 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 19:11:21 +0530